முதன்மை மாவட்ட நீதிமன்றம், தஞ்சாவூர்

IDOP 150/2022

நாள்: 28-11-2024

மனுதாரர் தரப்பு 2 வது சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு Bharatiya Sakshya Adhiniyam, 2023 சட்டத்தின் படி திரு.அ.அலாவூதீன், கிரேடு-1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தேவக்குமார் | வயது | : | 63 |
| தந்தை பெயர் | : | சிதம்பரம் | தாலுக்கா | : | அகஸ்தீஸ்வரம் |
| கிராமம் | : | கற்காடு | தொழில் | : | ஓய்வு பெற்ற அரசு ஊழியர் |

எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

1) திருமணம் முடிந்த பிறகு மனுதாரர் எவ்வளவு நாட்கள் கழித்து வெளிநாடு சென்றார் என்றால் ஒருமாதமோ இரண்டு மாதமோ கழித்துசென்றார்.

2) நான் சுசிந்தரத்தில் வசித்து வருகிறேன். மனுதாரர் நாகர்கோவிலில் வசித்து வருகிறார்.

3) முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விசயங்கள் நான் சொல்லிதான் எழுதப்பட்டது.

4) எந்த தேதி, எந்த மாதம், எந்த வருடம் மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையே சமரசம் செய்யப்பட்டது என்பதை என் முதல் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

5) காவல்நிலையத்திற்கு வெளியே வைத்துதான் சமரசம் செய்தோம். காவல்நிலையத்திற்கு உள்ளே வைத்து சமரசம் செய்யவில்லை.

6) போலிசாரிடம் சமரசம் பேசியது சம்பந்தமாக நான் எதுவும் சொல்லவில்லை.

7) இரண்டாவது தடவை சமரசம் செய்ததாக சொல்லும்போதும் நான் காவல்நிலையத்திற்கு உள்ளே செல்லவில்லை. வெளியே வைத்துதான் சமரசம் செய்தோம். இந்த விபரத்தையும் நான்

போலிசாரிடம் சொல்லவில்லை.

8) நானும் சமுக நலத் துறை அலுவலகத்திற்கு மனுதாரருடன் சென்றேன். முதல் விசாரணையில் நானும் மனுதாரருடன் சமுக நலத் துறை அலுவலகத்திற்கு உடன் சென்றதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சமுக நலத் துறை அலுவலரிடம் நான் சாட்சியாக வந்ததாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் சமுகநலத் துறை அலுவலர் வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை.

9) நான் முதல் விசாரணையில் சொன்னதுபடி எதிர்மனுதாரர் மனுதாரரை அடிக்க முயலும்போது நான் தடுக்க முயற்சி செய்தேனா என்றால் நான் முயற்சி செய்யவில்லை.

10) இது சம்பந்தமாக புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

11) சமுக நலத் துறை அலுவலகத்தில் நாங்கள் இது சம்பந்தமாக புகார் கொடுக்கவில்லை.

12) நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் மனுதாரர் என் உறவினர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை

இல்லை.

/உண்மை நகல்/

ஒம்/K.பூரண ஜெய ஆனந்த்
முதன்மை மாவட்ட நீதிபதி
தஞ்சாவூர்